மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 210, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள்.

210—

தேனீ வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம்

***47692 டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:**

மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் தொகுதி, பேச்சிப்பாறை வேளாண் அறிவியல் மையத்தில் தேனீ வளர்ப்பு மற்றும் நோய்த் தடுப்பு ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தோ.பெ. பூனாட்சி, கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, எனது பதிலை வழங்குகிறேன். கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, பேச்சிப்பாறை வேளாண் அறிவியல் மையத்தில் தேனீ வளர்ப்பு மற்றும் நோய்த் தடுப்பு ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பரிசீலனையில் இல்லை. அருகில் உள்ள அம்சியில், தேன் ஆராய்ச்சி மையம் அமைத்திட மும்பையில் உள்ள கதர் ஆணையத்திடம் நிதியுதவி கோரப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

முற்பகல் 11-10

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் தொகுதியில் பேச்சிப்பாறை

2015 செப்டம்பர் 2]

மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி மலர்கள் சாகுபடி நிறைந்த பகுதி. அப்பகுதியில் தேனீ வளர்ப்பு மற்றும் தேன் உற்பத்தியாளர்கள் அதிகளவில் உள்ளனர். குழந்தைகள் முதல் முதியவர் வரை அனைவரும் தேனைப் பயன்படுத்துகிறார்கள். தேனில் கார்போஹைட்ரேட், புரோட்டீன், வைட்டமின்கள் மற்றும் மினரல்ஸ் அதிகளவில் இருப்பதால், தேன் உடலுக்கு அதிகளவில் சக்தியைத் தருகிற ஓர் உணவு. தேனின் மருத்துவ குணத்தைப் பார்த்தால், அது cholesterol, peptic ulcer, tonsillitis and obesity, *அதாவது, உடல் பருமன் ஆகிய நோய்களிலிருந்து நிவாரணம் தருகிறது. தேனை நெல்லிக்காயுடன் சேர்த்து உட்கொண்டால், நமக்கு தோல் சம்பந்தமான நோய்கள்கூட வராமல் தடுக்கலாம். மார்த்தாண்டம் தேன் என்று சொன்னால், அது உலகத் தரம் வாய்ந்த, சிறந்த தேன் என்று சொல்லப்படுகிறது. குமரி மாவட்டம்தான் தேன் உற்பத்தியில் முதலிடத்தில் இருந்துகொண்டிருக்கிறது. பத்மநாபபுரம் தொகுதியில் சுமார் 5,000 தேனீ வளர்ப்புத் தொழிலாளர்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆரோக்கியமான ஒரு தேன் கூட்டிலிருந்து 10 முதல் 15 கிலோ கிராம் தேன் உற்பத்தியாகிறது.* YMCA-Young Men's Christian Association *என்ற ஒரு தனியார் நிறுவனம் தேனீ வளர்ப்பில் பயிற்சி வழங்கிக்கொண்டிருந்தது. ஆனால், இப்போது அந்தப் பயிற்சி வழங்கப்படவில்லை. அந்தப் பயிற்சி இல்லாத காரணத்தினால், இத்தொழில் பாதிக்கப்பட்டு, அழிந்துகொண்டிருக்கும் ஒரு நிலை தற்போது இருக்கிறது. அதுமட்டுமல்ல, தேனீக்களை* American Foulbrood *என்ற பாக்டீரியல் நோய் பாதிக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: *அதனால் தேனீக்களின் முட்டை உற்பத்தி குறைந்து லார்வா புழுக்கள் அழிந்து விடுகின்றன. 100 தேன் கூடுகள் வைத்தால், 25 கூடுகளில்தான் தேன் நன்றாகக் கிடைக்கும். ஆகவே, இதுகுறித்து தேன் வளர்ப்போருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்—தோட்டக்கலை ஆராய்ச்சி மையம்தான் அங்கே இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கவும். டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், சுருக்கமாகச் சொல்லுங்கள். நீங்கள் உங்கள் எண்ணப்படி பேசிக்கொண்டே இருக்கிறீர்களே?*

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: எனவே, தேனீ வளர்ப்போரின் நலனைக் கருத்தில்கொண்டு, தோட்டக்கலை ஆராய்ச்சி மையத்தில் தேனீ வளர்ப்பு மற்றும் நோய்த் தடுப்பு மையத்தை அமைத்துத் தருவார்களா என மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தோ.பெ. பூனாட்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அம்சியில் தேன் ஆராய்ச்சி மையம் அமைத்திட மும்பை கதர் ஆணையத்திடம் நிதியுதவி கோரப்பட்டுள்ளது. நிதியுதவி கிடைக்கும்பட்சத்தில், அம்சியில் தேன் ஆராய்ச்சி மையம் அமைத்திட வாய்ப்புள்ளது. பேச்சிப்பாறையும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளதால், அங்கு தனியாக வேறொரு தேனீ வளர்ப்பு மற்றும் நோய்த் தடுப்பு ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்.

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் தொகுதி, திருவட்டாறில் இயங்கி வந்த தேன் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் தற்போது செயல்படாமல் இருக்கிறது. அதைச் செயல்படச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். சிறு, குறு விவசாயத் தொழிலாளர்களுக்கெல்லாம் எளிய முறையில் வங்கிக் கடன் கிடைக்கிறது. அதேபோல், தேன் உற்பத்தியாளர்களுக்கும் வங்கிக் கடன் கிடைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். அதேபோன்று, அழிந்துகொண்டிருக்கின்ற இந்தத் தொழிலை ஊக்கப்படுத்துவதற்கும் அதற்கென தனி வாரியம் அமைப்பதற்கும் மற்றும் இன்சூரன்ஸ் வழங்குவதற்கும் அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2015 செப்டம்பர் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தோ.பெ. பூனாட்சி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, பரிசீலித்து, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(பட்டியல்கள் 8 முதல் 14 வரை)@

பட்டியல் 8

1—

நதிகளை இணைத்தல்

வினா எண் 15688—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து நதிகளையும் இணைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் தற்போது ரூ.369 கோடி மதிப்பீட்டில் தாமிரபரணி-கருமேனியாறு-நம்பியாறு இணைப்புத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளவாறு அமைந்தனவாகும்.

உண்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS